மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | ரொசாரியோ | நாள் | 08.12.2022 |
| தகப்பனார் பெயர் | அருள்சாமி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 குறுக்கு விசாரணை :-**

1) கடந்த 01.09.2009ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகளுக்கு நான் நிலம் விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிலம் எனக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2) தாவா சொத்து அமைந்துள்ள சாம்பள்ளி கிராமத்தில் எங்கள் குடும்பத்திற்கு சுமார் 1000 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு ச.எண்.848/1A வில் உள்ள எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தை தான் விற்பனை செய்துள்ளேன். மேற்படி ச.எண்.848/1A வின் பழைய சர்வே எண் ச.எண்.848/1 என்றால் சரிதான்.

3) மேற்படி ச.எண்.848/1A வில் உள்ள சொத்து எங்களுக்கு சேலம் மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.149/1968 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் படி தான் எங்களுக்கு பாத்தியப்பட்டதாகிறது என்றால் சரிதான். அந்த வழக்கிலேயே மேற்படி தாவா சொத்தின் சர்வே எண்.848/1 என தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) 1968ம் வருடத்திற்கு பின்பு தான்மேற்படி சர்வே எண்.848/1 ஆனது சர்வே எண்.848/1A மற்றும் சர்வே எண்.848/1B ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் பக்கம் 4ல் சொத்து விவரத்தில் சர்வே எண்.848 என மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.848 என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது தவறானது என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியான 01.10.1980ம் தேதியில் அவ்வாறு சர்வே எண்.848 என்று ஒரு சர்வே எண் பயன்பாட்டில் இல்லை என்றால்

சரிதான். வாதியின் தந்தை காளியப்பன் என் தந்தையிடமிருந்து தாவா சொத்தை அளந்து வாங்கினாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

7) மேற்படி சர்வே எண்.848/1 ல் ஊர் நத்தத்திற்காக எங்கள் குடும்பம் சார்பாக 28 செண்ட் நிலம் இலவசமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 28 செண்ட் நிலத்தில் வீடுகள் கட்டி சிலர் வசித்து வருகின்றனர் என்றால் சரிதான்.

8) 1, 2 பிரதிவாதிகளுக்கு நான் விற்பனை செய்த சர்வே எண்.848/1A ல் உள்ள நிலத்தில் அவர்கள் வீடுகட்டி இன்றுவரை அவர்கள் தான் சுவாதீன அனுபவத்தில் உள்ளனர் என்றால் சரிதான். நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தை சரியான அளவுகளின் படி தான் அளித்துள்ளேன். அதுபோக எனக்கு மேலும் சர்வே எண்.848/1A ல் சில மீதி நிலங்கள் உள்ளன. மேற்படி சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.